# கனடாவில்

(ரொறன்ரோ, மொன்றியல்)

எனது

# ஆன்மிகப் பிரசங்கங்கள்



'சிவஞானதுரந்தரர்', 'கானதமிழ்மணி'

## எம். எஸ். ஸ்ரீதயாளன்

உ

சிவமயம்

# கனடாவில் எனது ஆன்மிகப் பிரசங்கங்கள்
# Canadavil Enathu Annmiga Pirasangankal

உடுவை

## "சிவஞானவாரியம்"
## (தொகுப்பு -1)

அட்டைப்படம் - நூலாசிரியர்

உள்ளே....


அணிந்துரை - வாழ்த்துப்பா

வெளியீட்டுரை

புகுமுகத்துக்கு ஒரு அறிமுகம்

1. முதல் செய்யவேண்டியது
2. வரம்தரும் விநாயகனே
3. ஆனையும் அறுகம் புல்லில் சறுக்கும்
4. பேசவொண்ணாப் பெரியவர்கள்
5. நாம் இன்னமும் தயாராகவில்லையா?
6. நாள் வழிபாடு
7. பிள்ளைக்கறி



நூலாசிரியர்

"ஆசிரியமணி, சைவப்புலவர்"

**எம்.எஸ். ஸ்ரீதயாளன்** (புதுகலை இளவல்)

B.A (Cey). Dip.in.Edu.. SLTS1. ADE Jaffna


### காணிக்கை

அத்தனை இழந்தபோது
அருகிருந்தன்பு காட்டி, அறிவூட்டி
கல்வித்துறையில் நான் பரிமளிக்க
ஊக்குவித்து
அருள்நெறித் தொண்டாற்றவும்
என்னை வழிப்படுத்திய
எனது மூத்த சகோதரர்
அமரர். எம். எஸ் ஸ்ரீகாந்தன்
அவர்களுக்கு
15.08.2002

உ

வெற்றி

விவேகா அச்சகம்

ஸ்காபரோ - கனடா

15.08.2002

# வெளியீட்டுரை

எமக்குப் பெருமை தரும் பணி!

இலங்கையிலே இன்று ஆன்மிகக் கருத்துக்களை முத்தமிழும் விரவிய முறையில் சுவைபடச் சொல்லக் கூடிய ஒருவராய் விளங்கும் கான தமிழ்மணி சிவத்திரு மு.சி. ஸ்ரீதயாளன் அவர்கள் கனடாவுற்கு வந்திருக்கிறார் என்ற செய்தி அறிந்ததும் மிக மகிழ்ச்சியும் பெருமையுமடைந்த பலருள் நானும் ஒருவன். ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நிகழ்த்திய இசைப் பேருரையை இடுத்து 26 தினங்கள் ரொறன்ரோ ஸ்ரீ துர்க்கா ஆலயத்தில் பெரிய புராண விரிவுரை செய்கிறார் என்ற வானொலி, பத்திரிகைச் செய்திகளும் எனக்கு ஆர்வத்தைத் தூண்டின. தாயகத்தில் குறிப்பாக கொக்குவிலில் பிறந்த மைந்தன் எனது குருவானவர் பண்டிதர் எம். எஸ். மாஸ்ரரின் வாரிசும், எனது தந்தையார் நயினைக் கவிமணி அமரர் எஸ். செல்வநாயகத்தின் பிரியத்துக்குரியவருமாகிய இளைய சைவப் புலவர் திரு. தயாளன் அவர்கள்.

இலங்கையிலே கல்வி இலாகாவின் உதவிப் பணிப்பாளராய் யாழ்ப்பாணத்தில் இருப்பவர். அவருடைய கருத்துக்களில், ஆற்றல் மிகுந்த பேச்சுக்களில் அகப்பட்ட சிலவறிறையாவது தொகுத்து வெளியிட வேண்டுமென்று தமிழன்பர்கள், ஆர்வலர்களோடு குறிப்பாக என் பள்ளி நண்பர்கள் என்னை அணுகினார்கள். அந்த நல்லெண்ணத்தின் வடிவமே உங்கள் கைகளில் தவழும் இவ்வரிய நூல்.

இலங்கை இந்து சமய தமிழ் விவகார கலாசார அமைச்சினால் மூத்த கலைஞர்களுக்கான "கலைஞானகேசரி" விருதும், சர்வதேச இந்துக் குருமார் பீடத்தின் "வாகீசகலாபம்" உயர்விருதும் பெற்று, உடுவையில் "சிவஞானதுரந்தரர்" முதல் வடஅமெரிக்காவில் "புராணஇதிகாச இசைமணி" என்பது ஈறாக பல கௌரவங்களைப் பெற்ற இவரின் ஆற்றவை, கருத்துக்களை இச்சிறிய புத்தகத்தில் அகப்படுத்தல் போதுமா...?

பட்டதாதரியாய், புலவராய், முதுகலை இளவலாய் கல்வித்துறையில் அதிகாரியாய் விரிந்த இவரின் அறிவு இசையோடு கலந்தால் கேட்கவும் வேண்டுமா?

இந்த வகையில் அவர்பற்றி நாம் எழுதும் பதிப்புரையும் இதுவாக கால அவகாசமும் அவசரமும் கருதி, ஏழே ஏழு கருத்துரைகளை மாத்திரம் இங்கு தொகுத்துத் தருகிறோம். இந்த நாட்டிலே நம் ஆன்மிக நெறி சமய நடைமுறை விழுமியங்கள் எவ்வெத் தேவைகளை அவாவி நிற்கிறது என்பதை இந்நூலாசிரியர் தாம் தரிசித்த பாணியில் தருகிறார். சில விளக்கம் பெற

வேண்டியவை, விரிவு படுத்திக் கூறத் தேவையானவையும் கூட.

அவருடைய முழு பிரசங்கங்களையும் தொகுத்துத் பின்னராவது வெளியிட்டால் அது பலருக்கும் பயன்தரு கருமமாகும் என்று கருதுகிறேன்.

தாயகத்தில் இருந்து வருகை தந்த கான தமிழ்மணி, சைவப்புலவர் எம்.எஸ். ஸ்ரீதயாளன் அவர்களுக்கு கனடா வாழ் சைவத் தமிழ் மக்கள் நெஞ்சங்களின் வாழ்த்தும் சோபனங்களும் என்றும் இருக்கும். அறிவுச் செல்வரின் ஆன்மிகப் பணிகண்டு அதிசயித்தோம். வாழ்க அவர் இயற்றும் அருங்கலை!

அன்புடையீர் வாருங்கள் உள்ளே புரட்டுங்கள் பக்கங்களை. புதிய சிந்தனைகள் உருவாகட்டும். ஆன்மிகம் வளரட்டும் நம்மொழி தளைக்கட்டும்.

உங்கள் அன்பன்

திரு. ஸ்ரீதரன் செல்வநாயகம்.

பதிப்பு-வெளியீட்டாளர் : கனடாவில் எனது ஆன்மிக பிரசங்கங்கள்.

நன்றி

---

வாழ்த்துப் பாடல்

நந்தமிழர் நெஞ்சங்கள் கவர்கலைஞன் வாழி!

செந்தமிழர் பண்பாடும் பண்பும் ஆய்ந்தே
செழுங்கலைநூல் புராண இதிகாசத்தோடு
புந்திமகிழ் தமிழிசையும் தாளலயம்
புல்லரிக்கம் வண்ணம் இசைச் சொற்பொழிவு
தந்திடும் கலைஞன் - முது கலையின் மாணி
தண்டமிழின் கதாப்பிரசங்கம் செய்தே
நந்நமிழர் நெஞ்சங்கள் கவர்கலைஞன்
ஸ்ரீதயாளனவன் உயர்விருது பெற்றே வாழி!

சுபம்

மகாவித்துவான்

மா.த.ந. வீரமணி ஐயர் எம்.ஏ. (ஜே.பி)

---

விதப்புரை

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
248,1/1 காலி வீதி, கொழும்பு 04.

19.06.2002

......இவரது நிகழ்ச்சிகள் இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த ஆலயங்கயிலும், சமய நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் நடைபெற்றுள்ளன. இலங்கையின் வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களிலும் இவரது கதாப்பிரசங்கங்கள் இடம்பெற்றுள்ளன......

சாந்தி நாவுக்கரசர்

ஓம்
சிவாயநம

# கனடாவில் எனது ஆன்மிகப் பிரசங்கங்கள்

## புகுமுகத்துக்கு ஒரு அறிமுகம்

கனடா ரொரென்ரோ நகர், மொன்றியல் இந்து ஆலயங்களிலும், தமிழ் கலாசார நிலையங்களிலும் கனேடிய வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களிலும் நான் நிகழ்த்திய ஆன்மிகச் சொற்பொழிவுகளின் சாரத்தை ஒருபுத்தகமாக வெளியிட்டு, சில விடயங்களையாவது மக்கள் மனதில் மீண்டும் மீண்டும் பதிய வைக்கலாமே என்று கேட்ட என் நண்பர்-அரிய அன்பர் திருவளர் செ. ஸ்ரீதரன் அவர்கள், அந்தப்பணியைத் தானே செய்து தருவதாகவும் வாக்குத்தந்தார். அது நடந்தது ,கனடா பூங்காவில் எமது சந்திப்பிலே. அங்கு தான் எனது கொக்குவில் சமூகத்தினர்- குறிப்பாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் கனடாக் கிளை பழைய மாணவர் சங்கத்தினர் என்னை முதன்மை விருந்தினராக்கி 2002 இன் வருடாந்த முழுநாள் ஒன்று கூடலையும், பரிசளிப்பு வைபவத்தையும் நடத்தினர். யூலை 27. அது தான் மறக்கமுடியாத அந்த நாள்.

கனடாவிற்கு வருகை தந்து அங்கு தங்கியிருந்த எல்லா நாள்களிலும் எனது ஆன்மிகப் பேச்சுகளும், கதாப்பிரசங்கங்களும் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தன என்றால் ஆண்டவன் என்னை இங்கு அழைத்ததன் பெருமையைத் தான் என்னென்பேன்! ஆம். மேலை நாடுகளில், குறிப்பாக வட அமரிக்க நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் நம் தமிழ்ப் பெருங்குடி மக்கள், எங்கே எமது மரபுகளை, பண்புகளை, கலாசாரங்களை ஆன்மீக விழுமியங்களைத் தொலைத்துவிட்டார்களோ என்ற கற்பிதத்தோடு தேடிய எனக்கு நல்ல பதில்கள் கிடைத்தன. ஒவ்வாரு நாள்களிலும் நான் சந்திக்க வேண்டிய கூட்டம், நந்தமிழ்ச் சைவர்களாயிருந்தபடியால் இவ்விடயத்தில் அதிக சிரமமிருக்கவில்லை.அதையொட்டிய குறிப்புக்களை ஒரு சிறிய கட்டுரையாக்கியும் இங்கு இணைத்திருக்கிறேன்.

வந்தநாளிலிருந்து எனக்கு ஆன்மிகம் தொடர்பான சுற்றுலாக்களும், எனது நண்பர்களுடைய, உறவினர்களுடைய அன்புத் தொல்லைகளும் கூட ஒருபுறம் நிற்க, கனடா - ஸ்காபுரோ நகரிலுள்ள ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பரிபாலகரும் பிரதமகுருவுமான சிவாச்சாரிய குலபூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்களும், அந்த தேவஸ்தானமும், பக்தர்களும் எனது கனடா பயணத்துக்கும், நிகழ்ச்சிகளுக்கும் தந்த வரவேற்பு மறக்கமுடியாதது. அந்தப் பிள்ளையாரப்பனின் அற்புதமும் அழகும் பெருமையும் அங்கு கூடும் அன்பர்களின் ஆர்வமும் கண்டு வியந்து கொண்டேன்.

தொடர்ந்து, ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இந்து மகா சபையினர் என்னை அறிமுகம் செய்து வைக்க, கலாநிதி வி. கந்தவனம் அவர்கள் எனக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்க, ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய மகோற்சவ சிறப்புக் கதாபிரசங்கங்கள், அருள் மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் றிச்மண்ட்கில், (பணக்காரக் குன்று) பிள்ளையார் ஆலய சிவசுப்பிரமணிய சுவாமி உற்சவ விசேட நிகழ்ச்சி, சிவா விஷ்ணு கோவில் இன்னிசைவிரிவுரை, இந்து மகாசபையின் வெள்ளிக்கிழமை ஆன்மீக விருந்துகள்.... இப்படி இப்படியாக இடைவிடாமல் ஆன்மிக உரைகள்.

யூலை 17 ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 13 வரை என்னைத் தங்கள் தேவஸ்தானத்திலேயே தொடர்விரிவுரை ஆற்றுமாறு அழைத்தார் சிவஸ்ரீ தியாகராசக் குருக்கள். கணேச சுவாமிகள். கனடா ரொரன்ரோவில் முதலில் ஆரம்பிக்கப் பட்டதும் இன்று கோடிக்கணக்கான டொலர்கள் செலவிட்டு பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருப்பதுமான ஒரு கோயில் ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம். கோடி அர்ச்சனை ஸ்ரீ சக்கரபூஜைக்கான மகாமேருயந்திரப் பிரதிஸ்டை அறுபத்து நால்வர் பரிவாரக்கோயில்களெடுப்பு, மேலாக இம் முறைதான்
ஆரம்பிக்கும் மகோற்சவங்கள், நகரின் மத்தியில் அமைந்திருக்கும் ஆகம முறைப்படி பூஜை கிரியைகள் நடக்கும் கோவிலாயிற்றே! செவ்வாய். வெள்ளி, சனி, ஞாயிறுகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். 27 தினங்கள் தொடர்ச்சியாக இனிய வயலின், மிருதங்கம், தம்பூராவுடன்

இசைச்சொற்பொழிவு! இங்கு எனக்கு கிடைத்த ஆதரவு, என்கருத்துகளுக்கு கிடைத்த பெறுமதி, என்னால் இந்த நாட்டிலே செய்யக்கிடைத்த ஆன்மீகப் பணி என்பன மறக்கமுடியாதவையே. என்னே அந்த வாக்தேவியின் திருவருள்!

நான் நினைத்துப் பார்க்கமுடியாத புதுமைகள். இவற்றை விட கனடா திருச்செந்தூர் முருகன் கோவில், கனடா சிவா விஷ்ணு கோவில், நல்லூர் முருகன் ஆலயங்களில் இசைப்பேருரைகள்... மொன்றியலில் முத்தான 5 நாள்கள்... நிறைவாக, ஆதி அருள்நெறிமன்றம் என்ற பெயரில் கனடா நாட்டில் சைவத்தையும் தமிழையும் தொய்ய விடாதும், ஆர்வத்துடனும் வளர்த்துவரும் அற்புதமான ஒரு சைவநிறுவனம். டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம், புலவர் சிவானந்தன் ஆகியோரின் வழி நடத்தலில்.

என்னைப் பித்தியேகமாக அழைப்பித்து தமிழிசை விழா மண்டபத்தில் நிகழ்ச்சிகள் ஆற்ற வைத்து கௌவித்த நிகழ்வுகள் முத்தாய்ப்பாயமைந்தன.

கவிநாயகர் டாக்டர் வி. கந்தவனம், உழுவலன்பர் குப்பிளான் சிவா. முத்துலிங்கம், மூதறிஞர் முருக. வே. பரமநாதன் ஆகியோர் தலைமையில் இந்துமாமன்றம் எனது விரிவுரைகளை நடாத்தி, ஒலிப்பேழையாக்கி தொகுத்து மதிப்புத்தந்தது. புலவர், விஷகடி சிற்றம்பலம் ஐயா, நண்பர் பொற்பதி எஸ். மனோகரன், கலைஞர் கமல் உறவினர் சிவதொண்டன் திரு. த. செ. நடராசா ஆகியோரும், எனது பக்கவாத்திய இசைக்கலைஞர்களும் எனது கலைத்துவத்தோடு கூடிய தொடர் விரிவுரைகள் சிறக்கப் பக்கபலமாகயிருந்தவர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

எல்லாவற்றிக்கும் மேலாக, திருவருள் முன் கூட்ட, என்னை இங்கே அழைப்பிக்கக் காரணமாயிருந்த என் சோதரி ஸ்ரீசாலினி புண்ணியமூர்த்தி, ஆதரித்த பிள்ளைகள் குடும்பத்தினரின் வரவேற்பும், ஆதரவும் நன்றியுணர்வோடு நினைக்கற் பாலன.

எல்லா விடயங்களையும் எழுதிக்காட்டினால் இதுவே ஒரு கட்டுரையாகி, விளம்பரமாகி விடும். நோக்கம் புனிதமானது.அன்பர்கள் ஆன்மிக நண்பர்கள் விருப்பம் நியாயமானது எனத்தோன்ற சுருக்கமாக அந்தவிடயங்களை, அப்பன் உடுவை ஸ்ரீசிவஞான விநாயகன் அருளை முன்னிறுத்தி எழுதுகிறேன். அழுத்தம் பெறவேண்டியவை மாத்திரமே கட்டுரைகளாக இடம் பெறுகின்றன. விரிவஞ்சி எல்லா விடயங்களையும் அச்சேற்ற முடியாது உள்ளது. இந்நூலைப் பெறவும், இத்தனை அழகான முறையில் அமைத்துத் தரவும் ஆதரவு நல்கும் என் உழுவலன்பர் திருவுயர் கொக்குவில் ஸ்ரீதரன் செல்வநாயகம் - (உரிமையாளர் விவேகா பிறின்டேஸ் கனடா) தம்பதிகளுக்கும், இந்நூல் வெளியீட்டிற்கு ஆதரவு நல்கும் என் அன்பர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறுகிறேன்.

இனி- நீங்கள் வாருங்கள் கனடாவில் எனது ஆன்மிகச் சொற்பொழிவுகளின் சாரம் எது என்று காண, புரட்டுங்கள் பக்கங்களை.

அன்புடன்
எம். எஸ். ஸ்ரீதயாளன்

"சிவஞானவாரியம்"
லவ் லேன், உடுவில்,
சுன்னாகம்.யாழ்ப்பாணம்,
இலங்கை.

நம்மிடத்திலே உள்ள பற்று, ஆசை, விருப்புகள் எப்போது தான் எம்மை விடப்போகிறது? அது நடக்கக் கூடிய காரியமுமல்ல.

ஒழுக்கத்தை முழுமையாகக் கடைப்பிடித்த
பின்னர்தான் வழிபாட்டில் இறங்கவேண்டும்
என எண்ணினால், அலை ஓய்ந்த பின் கடலில் குளிக்கலாம் என நினைப்பவன் கதிதான் அது. - ஆகவே வழிபாட்டை முதலில் தொடங்கிவிட வேண்டும்
வழிபாடு முதிர, முதிர ஒழுக்கம் தானாகவே நிலைபெறும்
இதுவே ஆன்மீகத்தின் அடி நிலை

1

உ

கணபதி துணை

# முதல் செய்யவேண்டியது.....

எல்லா அறநெறிகளும், சமயங்களும் அன்பின் அடித்தளமே இறைவன் என்பதையே வலியுறுத்துவன. ஆயினும், இந்து மதம் சிறப்பாக நம் சைவசமயம் அன்புக்கும் பக்திக்கும் கொடுத்த இடம் மற்றநெறிகளைக் காட்டிலும் மேலோங்கி இருப்பதை நோக்குவதும் அவற்றை நாமெல்லாரும், இயன்றவரை கடைப்பிடிக்க வழிசெய்வதுமே எனது நோக்கமும் கருதுகோளுமாகிறது.

கடவுளை முறைப்படி மனத்தில் இருத்தி வழிபட்டு, மெய்வாழ்க்கை வாழும் பக்திநெறியை வலியுறுத்தியிருப்பதை, நமது சமயமானது வகுத்திருக்கின்ற பல்வகைவழிபாட்டு மரபுகள், ஆகம, புராணத் தகவல்கள் மூலம் நாம் அறிய முயலவேண்டும் என்பது எனது உள்ளக்கிடக்கை.

எமது சமயம் சார்ந்த, வழிபாட்டு மரபுகள் சார்ந்த போதிய அறிவும், தெளிவும் எம்மவரில் பலருக்கு இல்லாதிருப்பதும், அவற்றைத் தெரிந்துகொள்வதற்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் இல்லாம லிருப்பதும் இன்று நாம் காணும் உலகில் இருக்கிற சங்கடம் என்பதே உண்மை. எனவே இன்று சமயவாழ்வு வாழ்தலாவது என்ன என்பதையும் அதன் அவசியத்தையும் இப்போதிருக்கின்ற, இனிவரப் போகின்ற தலை முறையினருக்கு எங்களில் சிலராவது சில விளக்கங்களையாவது தெரிந்தவகையில் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை நான் இங்கு உணர்கிறேன்.

வாழ்வோடு இணைந்த ஒரு நல்ல நெறிமுறைதான் சமயம் என்பதையும், எம்மையெல்லாம் படைத்து, காத்து, அழித்து, அருளி, மறைக்கின்ற பரம்பொருளாக - பெரியஒரு சக்தியாக எமக்கு மேலே ஒரு கடவுள் இருக்கிறார் என்ற சிந்தனையையும் எல்லோருக்கும் - குறிப்பாக பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டிய நேரத்தைப் பற்றித்தான்

நான் இங்கு குறிப்பிடுகிறேன். இந்தத் தருணத்தில் உங்கள் வருங்காலம் பற்றியும் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். சமயம்வேறு வாழ்க்கை வேறல்ல. இரண்டும் ஒன்றே. சமய நெறிமுறையில் வாழுதல் என்பது உங்கள் சுதந்திரத்தைப் பறித்துவிடுதல் என்று கூட உங்களில் பலர் நினைக்கிறீர்கள். இதனால் உழைப்பு, ஊதியம், நேரம், நடை, உடை, பாவனை, நாகரிகம், சுதந்திரம், பொழுதுபோக்கு என்பன கூட கட்டுப் படுத்தப்படுமோ என்றும் அஞ்சுகிறீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த தாயகமும், எமது மரபு மாறாத பண்பாடுகளும், நாம் போற்றிப் பேணிவந்த விழுமியங்களும், நம்பிக்கைகளும் தொடர்ந்து பேணப்படுவதை உறுதிசெய்யுங்கள். அதுதான் இப்போதைக்கு இங்கு தேவை.

தமிழ் வாழவேண்டும், தமிழ்ப்பண்பாடுகள் ஓங்க வேண்டும் என்றும் தமிழனென்று ஒரு இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு என்றும் மார்பு தட்டி வீரம் பேசவேண்டும், மேலாக பரந்தும் செறிந்தும் வாழுகின்ற எம்மவருக்கு ஒரு தாயகம் ஏற்பட வேண்டும் என்றுமெல்லாம் உணர்வுபூர்வமாக பேசுகின்ற நாம் எங்களுடைய அடையாளங்களைத் தொலைத்து விடாமல் எங்கும் நடமாடவேண்டும் . ஒழுக வேண்டும்.

சுதந்திரமான நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வந்த நாம், அங்கெல்லாம் வழங்கப்படும் சுதந்திரமான சலுகைகளைக் கொண்டு எம்மை வளர்த்துக் கொள்வதில் தவறில்லை. ஆயின், இந்தச் சுதந்திரமான சூழலைச் சாதகமாக்கி எமது தனித்துவமான மொழியை, மரபுகளை, கலாசாரங்களை வளர்த்தெடுப்பதில் கொள்ளுகின்ற முனைப்பு இன்னும் போதியதாகத் தெரியவில்லை!

கோவில்கள், தமிழ்மன்றங்கள், கலாசார நிலையங்கள் ஆள்களுக்கேற்ப தலையெடுத்திருக்கின்றன - பணிகள் செய்கின்றன... ஒத்துக்கொள்ளலாம். ஆனால், தமிழ் மொழியினதும், தமிழர்களினதும் உணர்ச்சி பூர்வமான நடவடிக்கைகள் இன்னும் திருப்திகரமாக இல்லை. இயற்கையையும் காலநிலைகளையும் காரணம் காட்டி சார்த்ததன் வண்ணமாக வாழவேண்டியிருக்கிறதே என்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழர்கள் -இந்துக்கள் சொல்லித் தப்பிக்கொள்கிறார்கள்.

“எங்கடை பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது! அவையளுக்காக நாமும் எமக்குத் தெரிந்த இங்கிலிசைப் பேசுகிறோம். இனி அங்க வரப்போகின்றமோ? அவைக்கு என்னத்துக்கு தமிழும் ஆன்மிகமும்?” -

என்று கூறும் பேரன், பேத்தி, பெற்றோர், முதியவர்களை இங்கே சந்தித்தோம். வீட்டிலே கூட பிள்ளைகள் தமிழிலே பேசி உறவாடச் சந்தர்ப்பம் கொடுக்காத தமிழார்வலர்கள் - தமிழவர்கள் இவர்கள்!

இந்த நாடுகளிலே கல்விமொழி ஆங்கிலமாம். படிக்கிறமொழியைப் பயன்படுத்தி பழகுவது பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால், தாய்மொழிப் பயிற்சிக்கு உரிய சந்தர்ப்பங்களை வழங்கினால் தானே பிள்ளைகளுக்கு ஊடாக தமிழ்மொழியும் அத்தாய்மொழி வழக்காறும் வாழும். இங்கு தமிழினமாக புலம்பெயர்ந்து அன்றே வந்தவர்கள், பிரஜைகளாகியவர்கள், இங்கு பிறந்தவர்களை வழிப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அந்நிய மொழியைக் கல்வித் தேவைகளுக்கு பயன்படுத்துகிற நிலை, ஏன் நம் தாயகத்திற்கு இல்லையா? கல்வி, உத்தியோக தேவைகளிற் போக, ஏனைய நேரங்களில் நாம் தமிழ்பேசும் பிரஜைகளாவோம். எமது அடையாளத்தை பிள்ளைகளோடு சேர்ந்து உறுதிப்படுத்துவது மாத்திரமல்ல. அதனைப் பேணவும் வளர்த்தெடுக்கவும் முனைவோமாக.

ரொறென்ரோவில் ஆதிஅருள்நெறிமன்றம் இங்குள்ள தமிழ் மாணவர்களுக்கும், குழந்தைகளுக்கும் தமிழ்மொழியாம் தமிழ்மொழியையும் எம் தனி நெறியாம் சைவசமயத்தையும் இலவசமாகக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.மகிழ்ச்சிக்குரியது. இதைவிட, சில தமிழ்ஆசிரியர்களும் தனித்தனியே இத்தகையபணிகளில் பிள்ளைகளை நல்ல தமிழ்பேசவும், எழுத, வாசிக்கவும் படைப்பாற்றலை தமிழ் மொழி ஊடக மூலமாகவே வளர்க்கவும் தூண்டி வருவதும் நல்ல முயற்சி களானாலும், இம்முயற்சிக்கு உதவவருவாரும், ஆதரவு தரும் பெற்றோரும் மிகக் குறைவாகவே இருக்கின்றனர்.

தமிழில் நாயன்மார்கள் பாடிய தேவார திருவாசகங்களைப் பாடிக்காட்டுபவர்களுக்குப் போட்டியாம், தமிழில் கூடப் பேச்சுப்போட்டியாம்

டப்செய்யப்பட்ட தமிழ் - ஆங்கிலத்திலே தேவாரங்களை பாடல்களை, பேச்சுக்களை எழுத்தெழுதி உச்சரித்து, பின்பு மேடைகளிலே பேச வைக்கும் போலித் தமிழ்ப்போட்டிகள்......தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழ் எழுத வாசிக்க தெரியாது.... தமிழிசைக்கச்சேரிகளிலும் மாணவர்கள் - இளசுகள் ஆற்றுகைகள் செய்கிறார்கள். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட குறிப்புகள்- விளக்கங்களை வைத்துக்கொண்டுதான் பெரும்பாலும் இக்கைங்கரியங்கள் ஏதோ நடந்து முடிகின்றன!

இவற்றை எப்படி மடைமாற்றலாம் என்பதைச் சிந்திப்போம். தமிழிலே கதை, கட்டுரை, வாசிப்பு, ஆக்கமுயற்சிகள் வரை பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டிய அவசரம் உள்ளதே. வீடுகளிலாவது முயற்சிப்போம். வேறு இனத்தவர்களில் பலர் தமது மொழியை எந்தநிலையிலும் அடையாளப்படுத்தி, நடைமுறைப்டுத்தி வாழ முடியுமானால், நந்தமிழினத்தவர் தமக்குரிய பயில் தமிழை ஏனோ அரட்சியப்படுத்துகிறார்கள்?

1. கல்வி நேரம் , உத்தியோக நேரம் தவிர்ந்த வேளைகளில் வீட்டு மொழியாகப் பயன்படுத்துவதிலும், சிறப்பாக தம் பிள்ளைகளுக்கு தமது தமிழ்ப்பாரம்பரியத்தின் சுவடுகள் எவையெவை என்பதை உணரச்செய்ய முனைவதிலும் ஈடுபடுங்கள்.

2. கனடாவில் வாழும் நம்மவர்கள் ஆங்கிலத்தில் பேசுவது கெட்டித்தனம் இல்லை. எம் தாய்மொழியாகிய தமிழிலே பேசவும் எழுதவும் படைக்கவும் தேர்ந்து பிகாசிப்பதுதான் கெட்டித்தனம் என்று ஆகட்டும். அதற்கும் உரிய வாய்ப்புக்களை கனடா கல்விச் சேவை தற்போது வழங்கியிருப்பது நல்ல நிமிர்த்தம் அல்லவா?

## வழிபாட்டு மரபுகளைப் பேணல்

கனடா தேசத்தில் இந்துக் கோயில்கள் அற்புதமாக அமைந்திருக்கின்றன. வெள்ளி, செவ்வாய் முடிந்தால் சனி, ஞாயிறு தினங்களில் மக்கள் கூடுகிறார்கள். பூசைகள் அர்ச்சனைகள் , உபயங்கள், விழாக்கள் செய்வதில் ஈடுபடுகின்றார்கள். இது காலம், இடம், நோக்கி யதார்த்தமாய் இருக்கிறது என்பது உண்மைதான். ஆயின் சமய, வழிபாட்டு மரபுகள் நெறிகளின் நோக்கம் பற்றி பழையவர்களை ஓரளவு விடுங்கள் , எங்கள் இளம் சந்ததியினர்கள் எவ்வளவு தூரம் அறிந்து ஒழுகிறார்கள்?

நம்மவர் விழுமியங்களும் ஏன் நம் மொழியும் சமய மரபுகளும் இனி உள்ள வரப் போகிற சந்ததியிடம் கையளிக்கப்பட்டால் தான் இங்கு எம்முயற்சிகளுக்கு தக்க பலன் கிடைக்கும், தேவையும் நிறைவேறும். இனி வரும் காலத்துக்கு இங்கு வாழும் தமிழ் இந்துக்குடியினருக்கு நாம் எவ்வளவு சமய அறிவை - விளக்கத்தை, மரபு பேணலை - பாரம்பரியத்தைச் சொல்லித் தருகிறோம். ஆக-

1. வயது முதிர்ந்தவர்களாக, சுத்தமான எமது தமிழர்களாக வாழ்ந்து, வளமான வாழ்க்கைக்காகவோ, புகலிடத்துக்காகவோ உறவைப் பேணுவதற்காகவோ, பராமரிப்பு நாடியோ வந்த (Seniors) முதியவர்களும் பெரியவர்களும், இங்கு இருக்கின்ற இளசுகளுக்கு- நம்பிள்ளைகளுக்கு -நம்பேரர்களுக்கு தமிழில் வீட்டிலே பேசி, கலந்துரையாடி புழங்கத் தூண்டுதல் அவசியமாகிறத. சந்தர்ப்பங்களைக் கொடுத்தல் தேவையாகிறது.

2. சமய மரபுகளை, பாரம்பரியமாக தாயகத்திற் பேணிவந்த சமயச்சடங்குகளைப் பிள்ளைகள் அறியவும், அர்த்தங்களைத் தெரியவும் அவற்றில் நம்பிக்கை வைத்து மரபுமரபாக கடைபிடிக்கவும் வழிகாட்ட வேண்டும்.

பெரியவர்களே!

3. ஒரு நாளைக்கு ஒருதரமாவது குடும்பத்தில் எல்லாருமாக சேர்ந்திருந்து, அருட்பாடல்கள், வழிபாட்டு மந்திரங்களை வாய்விட்டுப் பாடி சமயவழிபாட்டு மரபினை பக்தியோடு கடைப்பிடிக்க வலியுறுத்துங்கள். பக்தி வலையில் படுவோன் காண்க! என்று மணிவாசகரே - பக்திநெறியை வலியுறுத்துவதையும் காட்டுங்கள்.

4. சுவாமிப்படங்கள், வழிபடுதெய்வங்களின் உருவங்களை வைத்து தினமும் தவறாது பூவும், தண்ணீரும், தூபமும் இட்டு கண்களை மூடி, கடவுளை நினைத்து வழிபடும் நியமத்தை - வழக்கத்தை வலியுறுத்துங்கள். இதுவே தியான வழிபாட்டு முறையின் பயிற்சிக்கு முதற்படி.

5. காலையிலும், படுக்கைக்குப் போக முன்புமாவது ஒவ்வொரு நாளும் திருநீறு - விபூதி தரிக்கின்ற நியமத்தைத் தவறவிடாது

இருக்கப்பார்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் அதி அர்த்தத்தைப் புரியப் பண்ணுகின்ற அதீத சக்தி அந்தப் புனித விபூதி அடையாளத்திற்கு இருக்கிறது என்பதை உணரப்பண்ணுங்கள்.

6. வாரத்தில் இரண்டுமூன்று தடவைகளாவது, ஆசாரமாய் இருந்து உரியமுறைப்படி ஆடை அணிந்து ஆலயங்களில் ஒன்றுக்காவது போய் வருதலை உறுதிப்படுத்துங்கள்.

7. குடும்பமட்டங்களில் நடைபெறும் சடங்குகளில் உறவினர்களோடு இன உணர்வோடு தமிழில் உறவாடி மகிழுங்கள். கூடியளவு எமது பழக்கவழக்கங்களை நடை, உடை, பாவனைகளில் கடைபிடியுங்கள்.

2

ஓம்
சிவாயநம

# வரம்தரும் வரசித்தி விநாயகன்.

சைவ சமயிகள் எக்கருமம ஆரம்பத்திலும் வழிபடும் தெய்வம் விநாயகரே. வி + நாயகர் விநாயகர். வி-நாயகன் தனக்குமேல் வேறொருவர் இல்லாத பெருமான். முதற்கடவுள். விக்கினங்களைக் கொடுக்கின்ற கடவுளும் அதனை நீக்குபவரும் அவரே. விக்னேஸ்வரர் என்று அவருக்கு ஒரு பெயரும் உண்டு. கணேசனாய், கணங்களுக்கெல்லாம் அதிபதியாய் - அறிவின் திருவுருவாய்- ஆனைமுகனாய் - ஐங்கரனாய் காட்சிதரும் எம்பெருமான் வரசித்தி விநாயகன் ஓங்காரத்தின் உட்பொருளாய் விளங்கும் பிள்ளைப் பெருமான் அவராவர்.

விக்கினகர்த்தாவும் அவரே, ஹர்த்தாவும் அவரே. கர்த்தா = துன்பத்துக்கு காரணன், ஹர்த்தா - அதை நீக்குபவன், வழிபடும் அவர் இடர் கடிகணபதி நம் பிள்ளைப் பெருமான்அல்லவா! எங்களுடைய இதயத்திலே இலேசாக வந்து உட்காரும் ஞானமே வடிவானவர் நம் ஓங்காரவிநாயகன். ஞானம் பாரம் அற்றது. இலேசானது. ஒருவன் கேட்டான்! கொழுத்தவயிறுப் பிள்ளையார் இந்த சின்ன எலியில் எப்படி உட்காருகிறார் என்று.

கஜமுகன் என்கின்ற ஆணவமே மயமாகிய அசுரன். எவருமே வெல்லமுடியாத பல வரங்களைப் பெற்றவன். அக்கயமுகனையே சங்கரித்த விநாயகன் அவனையும் ஆட்கொண்டு பின்பு ஆகு- பெருச்சாளி வாகனமாக ஆக்கிக்கொண்டான். அடக்கப்பட்ட ஆணவம் தான் எலியாகிய உருவகம். அப்படியானால் ஞானமாகிய பிள்ளையார் ஆணவத்தை அடக்கி ஒடுக்கி தனக்கு கீழே வைத்திருக்கின்றார் என்பதே தத்துவம்.அப்படியான கடவுளின் அந்த ஓங்கார உருவைக் கவனித்து வழிபடுகிறோமா?

"பண்ணியம் ஏந்தும் கரம் தனக்காக்கி, பால் நிலா மருப்பமர் திருக்கை விண்ணவர்க்காக்கி, ஆதனக்கலச வியன்கரம் தந்தை தாய்க்கு ஆக்கி, கண்ணில் ஆணவ வெங்கரிபிடித்தடக்கி கரிசினோற்கு இருகையுமாக்கும் - அண்ணலை தணிகைவளராபச் சகாயனை அகந்தழீக் களிப்பாம்."

இவ்வாறு பிள்ளைப் பெருமானின் ஒவ்வொரு அங்கமும் அர்த்தமுள்ளவை என்பதை நாம் அறிந்து கொள்வோம்.தெய்வாம்ஷம் - மனுஷஅம்ஷம் - பூத அம்ஷம் இந்த மூன்றும் கொண்ட பிரணவநாதன் தும்பிக்கையிலே நம்பிக்கை கொள்ளவேண்டும்.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

பிள்ளைப் பெருமானை நாள் மலரிட்டு முப்போதும் வழிபடுவார்க்கு ஒரு தீங்கும் வாழ்க்கையிலெ நேராது என்பது சைவப்பெருமக்களின் தளராத நம்பிக்கை.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே விண்ணுக்கும்
மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து!"

பிள்ளையாருக்கு ஐந்து கரங்கள், ஆனை முகம். இந்தின் இளம்பிறை போலும் எயிறுகள் (தந்தங்கள்) இவற்றோடு பெரிய செவிகள். எமது வேண்டுகோள்களை எல்லாம் தன் இரு பெரிய செவிகளால் இருந்து கேட்டு வரம் தர வல்லவர் நம் வரசித்தி விநாயகன் ஒருவனே.
கற்றிலனாயினும் கேட்க என்றான் வள்ளுவன். பாருங்கள்! ஞானத் தேட்டத்திற்கு, அறிவிற்கு கேள்வி எவ்வளவு முக்கியம் என்று.

காது- எமது அங்கங்களிலே மூடப்படாத ஒரு உறுப்பு. யாராவது காதை மூடுவீர்களா? மூடி இருக்கா? எம்பெருமான் விநாயகனுடைய காது பெரிய காது....
இந்தப் பிள்ளையார் வணக்கத்திலே காது பற்றி அறிவோம். வடமொழியிலே கர்ணம் என்றால் காது. தோர்பி என்பது கைகளால். கைகளால் காதுகளைப் பிடித்துக் கொண்டு தாழ்ந்து செய்யும் சிறப்பான வழிபாடு இது. ஏன் தோப்புக்கரணம் போடவேண்டும்? கஜமுகாசுரனுடைய கட்டளைக்குப் பயந்த தேவர்களும் முனிவர்களும் மற்றவர்களும் முன்னொருமுறை தங்களுடைய செவிகளை கைகளினால் பிடித்துக்

கொண்டு பலமுறை தோப்புக்கரணம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்களாம். இதன் காரணமாக கயமுகனுடைய ஆணவச் செருக்கை பிள்ளையார் அடக்கி கயமுக சம்காரம் செய்தார். அந்த நன்றிக்காக பிள்ளையாருக்கு ஒரு தோப்புக்கரணக் கும்பிடு......

ஆனைமுகனும் ஆகுவாகனமும் கதையை பிறகு சொல்லுகிறேன், அன்றி தேடிப்படித்துக் கொள்ளுங்கள்!

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்று காட்டுகின்ற கடவுள் கணபதி. இது பலருக்கு தெரியாது. இந்த பிரபஞ்சத்திலே இருந்துகொண்டே பிரபஞ்சத்தை அடையலாம் - வெல்லலாம் என்று காட்டுகிற மோதகம் விரும்பும் கடவுள் பிள்ளையார்.

பிரபஞ்சம் - முத் = மகிழ் : இதிலேயிருந்து வந்ததே மோதகம்
அங்கே அரிசிமா ஆகிய கவசம் - இது மறைத்தல்
பருப்பு - வெல்லம் - துருவல் - இவையெல்லாம் பூரணம்
∴ மோதகம் என்றால்
1. சத்து 2. சித்து 3. ஆனந்தம் 4. நாமம் 5. ருபம்
இந்த அம்ஷங்கள் 5ம் சேர்ந்தது.

கோவிலுக்கு அடிக்கடி வர வேண்டும், கடவுளைக் கண்டு தொழவேண்டும் என்ற நினைப்பு சைவனுக்கு மிகமுக்கியம். சித்தம் அழகியவருக்குத்தான் சிவன் அருளுவான் என்பதே சித்தாந்தம்.

"சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை?"
என்று இதனைத் தான் மாணிக்கவாசகசுவாமிகளும் தம் திருவாசகப் பனுவலிலே தெளிவாக வலியுறுத்துகிறார்.
நாம் வழிபாடு செய்ய வேண்டியதன் நோக்கத்தை -அவசியத்தை மறக்கவும் கூடாது கைவிடவும் கூடாது.

3

ஓம்
சிவாயநம

# "ஆனையும் அறுகம் புல்லிலே சறுக்கும்"

## அனலாசுரனும் அறுகம் புல்லும்

நவரத்தினங்கள் பதித்த மணித்தவிசில் இயமதர்மராசன் கம்பீரமாக வீற்றிருக்கிறான். அந்த இயம தர்மனைச் சுற்றிவர விண்ணவருடன், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், முனிவர்கள் யாவரும் புடைசூழ இருக்கிறார்கள்.

ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை ஆகிய தேவ அரம்பையர்கள் தமது முழுத்திறமையையும் காட்டி நடனம் ஆடிக்கொண்டிருந்தார்கள். தேவரம்பையர்களுள் மிகஅழகுள்ளவள் திலோத்தமை. நடனவேகத்தில் அவளுடைய சிவந்தமேனியிலிருந்து மெல்லாடை மெதுவாக நழுவியது. அவள் நாணிக்கொண்டே அவ்விடத்தை விட்டு அகலுகிறாள். திலோத்தமையின் ஆடலை வைத்தகண்வாங்காமல் உற்றுநோக்கிக் கொண்டிருந்த யமன் - ஒரு கணம் தன்னை மறந்தான். அவள் சென்ற திக்கில் தானும் பின் தொடர்ந்தவன் அந்தப்புரத்தை அடைந்தான்.... அந்தவேளையிலே அனலாசுரன் என்ற கொடிய அசுரன் பிறந்தான்.அனல் என்றால் நெருப்பு. அறிவீர்களல்லவா?

பெரிய பற்களும், கரிய உருவமும் பெரிய மீசையும் அவனுக்கு அனற் கொழுந்துக் கண் போன்ற புற மயிர்கள்.... அவனைக் கண்டு, முப்பத்து முக்கோடி தேவர்களும் முனி சிரேஷ்டர்களும் மற்றவர்களும் அஞ்சி ஓடி அங்கலாய்த்தார்கள்.மகனைக் கண்டு யமனான தகப்பனே அஞ்சினானாம். தன்னை அவன் அணுகாதபடி தன்னைச் சுற்றித் தாளிட்டுக் கொண்டான் யமன்.தந்தையான யமனை இடர்ப்படுத்தாமல் ஒதுங்கிச்சென்றான் அனலாசுர மைந்தன். நடந்து நடந்து நிலவுலகிலுள்ள எல்லா உயிர்த்தொகைகளையும் பிடித்துக்கடித்துத் தின்றான்.

விண்ணுலகம் போனான் , இந்திரன் முதலான அமரர்களும் நடு நடுங்கி வைகுந்தம் போய்த் திருமாலிடம் முறையிட்டனர். நாராயணன் அனலாசுரனுடைய ஆற்றலை அவதானித்தார். இவனை விநாயகப்பெருமான் ஒருவர் மட்டும் தான் அடக்க வல்லார், பிறரால் இவனை அணுக வொண்ணாது என்று கருதினார்.

எல்லோரும் விநாயகப்பெருமானின் திருநாமங்களைக் கூறித் துதிசெய்தார்கள். மனம், மொழி, மெய்யாலே போற்றினார்கள்.

"இணைகொள் கையை எதிரெதிர் மாற்றியே
துணைகொள் வார் குழை தொட்டனர் மும்முறை
கணைகொள் காலும் கவானும் செறித்திட
தணிவில் அன்பொடு தாழ்ந்தெழுந் தேத்தினர்"

-கந்தபுராணம்

அந்தணச் சிறுவனாக உருவம் தாங்கி நம் பிள்ளைப்பெருமான் அங்கு எழுந்தருளினார். அபயச் சைகை காட்டி அனலாசுரனை நெருங்கினார். அந்தோ அனற்பிழம்பாம் அக்கொடிய அசுரனை தன் கைகளினால் எடுத்து வாயில் இட்டு அப்படியே விழுங்கினார். இப்போது சகல உலகங்களும் அனலாசுரனால் 'அகப்படுத்தப்பட்டவகை பிள்ளைப் பெருமானின் பெருந்தொந்தியுள்ளே புகுந்தன. அனலாசுரனுடைய உடலின் சினத்தினால் எழுந்த அனலானது எல்லா உலகங்களையும் உயிர்களையும் சுட்டுப்பொசுக்கிக் கொண்டிருந்தது.... எல்லோரும் வெப்புத் தாங்கமுடியாது கதறி ஓடினர். அரனாரை எல்லோருமாகச் சேர்ந்து பிரார்த்திக்கலாயினர். பிரம்ம ரிஷியின் ஆலோசனைப்படி நாராயணனும் பிரமனும் முனிவர்களும் அறுகம் புல்லின் அற்புதத்தை ஓர்ந்து, மலை மலையாக அறுகம் புல்லைக் கொணர்ந்து, அனலாசுரனை விழுங்கிய விநாயகனின் திருமுடியில் சாத்தியும், அர்ச்சித்தும், பாலுடன் தேன் சேர்த்தும் அபிஷேகம் செய்தும் தொழுது நின்றனர்.

அறுகு அபிஷேகத்தினால் அப்பன் விநாயகன் குளிர்ந்தான். அனலாசுரனும் பலமழிந்து மாய்ந்தான். இன்றைக்கு நமக்கு ஏற்படுகின்ற துன்பத்துக் கெல்லாம் காரணம் நாம் கடவுளை நம்பிக்கையோடு பற்றுவதில்லை.அப்பன் விநாயகனை அறுகு கொண்டு அன்றாடம் அன்பொடு துதித்து வேண்டிய வரம் பெறுவோம்!

ஆகவே நாம் கூப்பிட்ட குரலை தம்மிரு செவிகளால் கேட்டு எவ்விடத்திலும் எளிமையான கடவுள் பிள்ளையார் என்பதனால் எளிய புல்லிலுரும், மண்ணிலும் உறையும் தெய்வமாக பிள்ளையாரை நாம் தரிசிக்கிறோம். இதுவே ஆனையுப் அறுகம்புல்லிலும் சறுக்கும் என்ற முதுமொழியின் பொருளும் ஆகும். ஆனை என்றது விநாயகனை.

4

ஓம்
சிவாயநம

# பேசவொண்ணாப் பெரியவர்கள்

(பெரியபுராணம் - தகவல்கள்)

"பெருமையால் தம்மை யொப்பார்
பேணாலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமே லொன்று மில்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்ப மார்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய்......"

-சேக்கிழார்.

என்று பேசவொண்ணாப் பெரியவர்களின் பெருமையைப் பற்றி வன்றொண்டராம் ஆலாலசுந்தரருக்கு சிவபெருமானே தெரிவித்து அடியார்கள் போல் பாடுமாறு பணித்தாராம். திருத்தொண்டர் தொகை பிறந்தது. திருத்தொண்டர் திருவந்தாதியை நம்பியாண்டார் நம்பி தர விரிநூலாம் பெரியபுராணத்தை பக்திச் சுவைநனி சொட்டச் சொட்ட சேக்கிழார் பெருமான் எமக்குத் தருவாராயினார்.

ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமில்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் சூட்டிப் போற்றி, ஆயிரம் திருக்கோயில்களையும் எழுப்பி வழிபட்டிருக்கிறோம். சைவசித்தாந்தப் பெருநெறி எல்லாம் வல்ல சிவபெருமானையே முழு முதற்தெய்வமாகக் கொண்ட நெறி. அருவமும், உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் ஒருவனாகிய பதியே விளங்குகிறார் என்பது நமது நம்பிக்கை. மேலான பரம்பொருளை நாமெல்லாம் நம்பிக்கையோடு பற்றி வழிபாடுசெய்ய உகந்தமார்க்கங்களாக மூவகைவழிபாடுகளை வகுத்த சிவநெறி, அடியார்களை வணங்கி ஈடேறுகின்ற முறைமையும், அவர்கள் காட்டிய பாதையில் நாம் ஒழுக வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறது. அந்தவகையில் குருவழிபாடும் பிரதானமாகிறது. கோயில் வழிப்பாட்டோடு அடியார் திருக்கூட்டத்தைத் தொழுதலும், குருவருளைப் பிரார்த்தித்தலும் நமது சமய வழிபாட்டோடு சேரும்.

இந்த மூன்றும் தான் குரு- லிங்க- சங்கமம் என்று குறிப்பிடப் படுவது. சங்கமம் என்பது அடியார்களுடைய திருக்கூட்டம்.

சிவனடியார்களையும், சிவாலயங்களையும் நாங்கள் சிவனெனவே கண்டு தொழ வேண்டும் என்றுகாட்டுகின்ற மெய்கண்டார்,

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டார்
அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்று தம் சிவஞானபோதமாம் சமய சாஸ்திர நூலிலே குறிப்பிடுகின்றார்.

ஆகவே ஆலயவழிபாடு எத்துணை முக்கியப்படுத்தபடுகிறதோ அத்தனை அளவு அடியார்களைப் போற்றுகின்ற - நாயன்மார்களுடைய நெறிகளை நினைக்கச் செய்கின்ற - குருபூசை கொண்டாடுகின்ற மரபு- குருவழிபாடு எம்மிடத்தில் தவறாது இடம்பெறவேண்டும்.

திருநீறு தரித்தல், அஞ்செழுத்தை ஓதுதல், திருநாமங்களைச் சொல்லி அருச்சித்தல், திருக்கோயில்களுக்கு தவறாது சென்று தரிசித்தல் என்பன சைவமக்களுடைய தவறாத நியமமாக இருக்க வேண்டும்.

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறம் ஒருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர் பறித்திட்டுண்ணாராகில்,
அருநோய்கள் கெடவெண்ணீரணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோவென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதையே தொழிலாகி இறக்கின் றாரே"

இது திருநாவுக்கரசர் கருத்து. அவர் கண்ட நெறியிலே - அன்பு நெறியிலே ஒரு அனுபவமுத்தினை கருத்துப்படிவமாகத் இத்தேவாரத்திலே காண்கிறோம். இதுவே அடியார்களின் அன்பு நெறிக்கு அடிப்படை தந்த வழிபாட்டு மரபு.

## பக்திநெறியினால் பிறவாயாக்கை பெற்ற பெரியவர்கள்.

ஒவ்வொரு நாயன்மார்களும் கைக்கொண்ட அன்புநெறியை ஒரு முறை நோக்கிப் பாருங்கள்! சைவசாதனங்களைப்போற்றிய அவர்கள் வழியை நாங்கள் பின்பற்ற வேண்டும்.

சமணசமயத்தில் சென்று புகுந்த தம்பியை சிவநெறிக்குத் தர, திருவீரட்டானேஸ்வரரை வேண்டித் திலகவதியின் வேண்டுதலுக்கு பலன்கிடைக்கிறது. திருநீற்றை வாங்கியணிந்த தருமசேனர் பெருவாழ்வு வந்ததே என்று மகிழ்ந்தார். தன் நோயெல்லாம் அகன்றது மட்டுமல்ல என்பிறவி நோயே அகன்றது என்றார்.

சம்பந்த சுவாமிகள் பாண்டியனுக்கு வெப்புநோயேற்படக் காரணமானவர். பிறவிநோயறுக்கவல்ல மந்திரமான திருநீற்றினை வைத்து வைத்தியம் செய்து வெற்றி காண்கிறார். பாடல் எமக்கெல்லாம் தெரியும்.

முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன் என்று பதிகம் செய்தார் சுந்தரர். அஞ்செழுத்தை மறவாமையை வலியுறுத்த நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே என்று பாடி விட்டார். இறையுணர்வு நமக்கும் அத்தனை தூரம் ஊற வேண்டும்.

எங்களுடைய சைவநெறியிலே மிகமுக்கியமான ஒரு இடம் இங்கே வருகிறது. எவரெல்லாம் யமனை வென்றவாகளாக - இறவாத இன்ப அன்பிலே விளங்குகின்றார்களோ அவர்களைத்தான் நாயன்மார்களாக, சமயகுரவர்களாக நம் நெறியிலே நாம் பார்க்கிறோம். சாதாரணமாக மனிதருக்கு வருவதுபோன்ற சாவில் அவர்கள் வாழ்வு நிறைவடைந்தால் நாம் அவர்களை தெய்வீக நிலையிலே போற்றமாட்டோமே! அப்படியானால் எமது குரவர்கள் யார்? செயற்கரிய செய்தவர்கள் அல்லவா. இவர்களைத்தான் பேசவொண்ணாப்பெரியர் என்பார் பெரியபுராணச் சேக்கிழார்.

ஓம்
சிவாயநம / நமசிவாய

# நாம் இன்னமும் தயாராகவில்லையா?

## வழிபாடுகளும் சாதனைகளும் ஏன் அவசியம்?

அன்புநெறியே நம் சைவசமயம்: அன்புநெறியே வைசசித்தாந்தத்தின் அடிநிலை. அன்பே சிவம். அன்பும் சிவமும் இரண்டெனபர் அறிவிலார் என்று தெரிவிக்கும் திருமூலர்பெருமான் 'அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே' என்று குறிப்பிடுகிறார். அன்பு செய்து இறைவனைக் காணும் நெறி - பக்திநெறி. எம்பெருமானை, கடவுளை அறிந்து அவனோடு ஐக்கியப்படுவதற்கு பக்தி செய்து ஒழுகுதல் ஒன்றே நல்ல சாதனமாகும் என்று காட்டும் சாதனாநெறியே சைவ சமயமாகும்.

'அன்பராலன்றி யாவராலும் அறியொண்ணா மலர்ச் சோதியான்' குரவர் மணிவாசக சுவாமிகளே இதனைத் தெளிவுறுத்தியுள்ளார். ஹடமுறைகள், இரகசிய சாதனங்கள் முதலியவற்றால் ஈட்டமுடியாத இறை அனுபவத்தை பக்திசெய்தலால் அடையலாமென்பதைக் காட்டவே அன்பராலன்றி என்று அன்புக்கு அழுத்தம் கொடுத்தார்.

பக்திநெறி அறிவித்து பழவினைகள் பாறுவண்ணம் சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் நம் சிவபெருமான் என்று தம்முக்தி நிலையைக் காட்டுகின்றார் அதே மணிவாசகப் பெருமான்.

சைவசமயம் காட்டுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கும் பக்திநெறியின் கூறுகளேயாகும்.

சரியை - உடலால் செய்யும் வழிபாடு
கிரியை - உடலாலும், மனத்தாலும் செய்யும் வழிபாடு
யோகம் - மனத்தினால் புலனடக்கி செய்யும் வழிபாடு
ஞானம் - அறிவினாலே செய்யும் வழிபாடு

ஞானமென்பது ஈசன்பால் அன்பே - என்பது பெரியபுராணம். பக்தியானது திருவருள் ஞானத்தைத் தந்து இறைவனை அடைவிக்கும்.

6

ஓம்
சிவாயநம

# நாள் வழிபாடு

**ஆளும் நாயகனுக்கு நன்றி சொல்லல்.**

எமது வாழ்வில் நிகழும் சோதனைகள், தடைகளெல்லா வற்றையும் கடப்பதற்கு வழிபாட்டைத் தவிர வேறு வழியில்லை. சைவ சமயத்தவர்கள் நிதமும் கடவுள் வழிபாட்டைப் பேணவேண்டும். மனம், மொழி, மெய்களால் கடவுளையும் மக்களையும் அன்புசெய்து போற்றி ஒழுக வேண்டும். வீட்டிலே மனம் ஒன்றி வழிபாடுகளிலீடுபடுதலும், தினங்களிலேயாவது கோவில்வழிபாடுகளில் கலந்து கொண்டு பக்திநெறியில் பயில்வதும் சைவர்களுடைய தவிர்க்க முடியாத நியமங்களாகும். வீட்டிலே ஆன்மீகநெறியில் வாழ்தலாவது ஒன்றும் பெரியகாரியமில்லை. இதுவே ஆன்மார்த்த வழிபாடு. தனக்குத் தனக்கு பயன் உள்ளது.

## ஓரிருதரமாவது ஆண்டவனை நினைத்தல்

நாள் வழிபாடாவது வாழ்முதலாகிய பரம்பொருளை மனத்திருத்தி, மனம்விரும்பிய குலதெய்வத்தைப் பிரார்த்தித்து ஒவ்வொருநாளும் சுவாமியறையில் அருட்பாடல்களாக மந்திரங்களாக, தியானமாக கடைப்பிடித்தலாகும்.

அஃதாவது காலையிலெழுந்து ஒவ்வொருவரும் விபூதி தரித்தலும் சுவாமியறைக்கு சென்று இறைதிருவுருவங்களுக்கு பூவும் நீருமிட்டு சிலநிமிடங்களாவது மற்றக்காரியங்களை ஒதுக்கி, கும்பிடும் நியமத்தைக் கடைப்பிடித்தலும். அவ்வாறே இரவில் படுக்கைக்கு போகுமுன் கட்டாயம் விபூதி தரித்து, கடவுளைத் தியானித்து, அந்தநாளை திருப்திகரமாக நிறைவேற்றவழிசெய்த இறைவனுக்கு நன்றிசொல்லி, பின்னர் படுக்கைக்கு செல்லுதல் அவசியமான கருமம் என்பதை நாமொவ்வருவரும் உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். “சலம்பூவெடு தூபமறந்தறியேன்......” என்ற பாடல் மூலம் நாவுக்கரசர் பெருமான் இந் நாள் வழிபாட்டையே வலியுறுத்துவார்.

பரார்த்தமாவது மற்றவர்களோடு சேர்ந்து தானும் உறவும் ஊரும் உலகும் வாழ பொது இடங்களில் ஆற்றும் வழிபாடுகளும் சடங்குகளும் ஆகும்.

இதற்காகவே ஆலயங்கள், வழிபாட்டு நிலையங்கள் உருவாகியிருக்கின்றன. இறைவனுக்கு வகுக்கப்பட்ட திருவுருவங்களைக் கண்டு, தியானித்து, சடங்குகளால் விழாப்பொலிவு கண்டார்தல் - ஆலய வழிபாட்டு நெறியின் பாற்பட்டது.

## நேர்த்தியான உலக வாழ்வு தான் சமயம்

சமயம் என்பது ஏதோவொன்று எனவும் அது இங்கு- எம் வாழ்வியலுக்கு பொருந்தாதது எனவும் எம்மிடத்தில் ஒரு நினைப்பு ஏனோ இருக்கிறது? நல்வாழ்வுதான் சமயம்- சமயம் தான் நல்வாழ்வுமுறை எம்மை ஆள்விக்கும் பரம்பொருள் - பெரிய சக்தியொன்று உள்ளது. அதுஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம். இந்த உலகத்திலே நாம் ஆற்றும் எமது செயல்களுக்கு எல்லாப் பலன்களையும் ஊட்டுவிக்க ஒரு சக்தி இருக்கிறது. அதுவே பரம்பொருளாகிய சிவம் என்ற உணர்வு மட்டும் இருந்துவிட்டால் எமது வாழ்வே செம்மையாக ஓடும். அவ்வாழ்வை நல்ல வழியில் செலுத்த உதவுவதே வழிபாடு.

நல்லாசாரங்கள், கோயில்தரிசனம், புலனடக்கம், தியானம், மக்கள் சேவை என்பன சமய வாழ்வோடு தொடர்பான நெறிமுறைகள் என்பதை நாம் முதலில் அறிந்து கொள்வோம். இதுவே பக்திமார்க்கத்தினுடைய வாயில் என்பதையும் மேற்சொன்னவையே முதற்சாதனைகள் என்பதையும் புரிந்து கொண்டால். பின்பு - சைவம் கூறும் சித்தாந்தம் என்ன என்பதை அறியமுயலும் ஆர்வம் பிறக்கும். எமது சமய நெறியின் சிறப்புகள் எவை என்பதை அறியும் ஆர்வமும் ஏற்படும். படிமுறையாக, இனி சமயஉண்மைகளை, ஆகம புராண இதிகாசங்களை, திருமுறைகள் காட்டும் நெறியில் அறியும் நிலைவர சமயஞானம் ஏற்படும். இந்த அறிவும் கிடைக்கப்பெற்றுவிட்டால், பிறகென்ன? அன்புநெறி, அறிவு நெறியாக-சாதனைகளால் வாழ்வை நாம் நேராக்க எல்லாமே பேரானந்தமயமாகி வந்துகொண்டிருப்பதை வாழும் போதே நாங்கள் உணர்ந்து கொள்ளலாம். “நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்.........இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை” என்ற உறுதியும் நம்பிக்கையும் மகிழ்வும் வாழ்வில் உருவாகும்.

ஆகவே வாழ்விலே ஒரு புனிதம், நிறைவு, வெற்றி என்பவற்றிக்காக எமது ஆன்மார்த்த, பரார்த்த வணக்கங்கள், வழிபாடுகளை முதலில்

தினமும் நியமப்படுத்திக்கொள்வோம். அன்பு செய்து - பக்திசெய்து மனுக்குலத்துக்கு இதமானவற்றைச் செய்யும் சாதனைகள் தான் சமயம் காட்டும் சிவவாழ்வு என்று அறிவோம். மன் + இதன் = மனிதன் மனிதன் மனிதனாக அவன் வானுறையும் தெற்வத்திற்கு நிகரானவனாக மாறுவான். மதிக்கவும் படுவான்.

புறச்சூழல்களின் தாக்கங்கள், நெருக்கீடுகள், மன உழைச்சல்கள் என்பன தானாகவே விலகிப்போவதை உணரமுடியும். அல்லாவிட்டால் அவை பெரிய சுமையாக இருப்பது எமக்கு தெரியாமலே இருக்கும்.அன்பு நெறியையும் வழிபாடுகளையும் மற்றவர்களுக்கு இதமாக இருக்கும் பண்புகளையும் வாழ்க்கையில் கடைப்பிடித்துப் பாருங்கள். உண்மையை இலகுவில் உணர்வீர்கள்! எல்லாம் வல்ல இறைவனே எம்மை வழிகாட்ட நாம் வாழ்க்கையில் பயணிக்கிறோம் என்ற சிந்தனைத்தெளிவு வர, மனிதன் இனி மனு + ஈனாக - மனுஷனாகவருவான். அவனே மனிதனும் கூட என்பது புலனாகும். இனி வள்ளுவர் பெருமான் குறளை உற்று நோக்கி உணருங்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

ஆகவே, முதலிலே எம்மிடையே தெய்வம் என்போர் சித்தம் உண்டாக வேண்டும். அதற்கு ஏற்றதாக எம்மை நெறிப்படுத்தி வாழ்வதோடு எம் வருங்காலச் சந்ததியினரையும் எம்பிள்ளைகளையும் அதற்கு வழிப்படுத்தி வாழ்வில் நிறைவான இன்பம்பெற உடனே தயாருங்கள் - தாயார்படுத்துங்கள்! தயார்ப்படுத்துங்கள்.

அன்பாலே மக்கள் குலம் இணைந்து வாழ
அருள்நெறியை பரப்புதலே எங்கள் நோக்கம்

சுபம்.

7

ஓம்
சிவாயநம

## பிள்ளைக்கறி

சமைத்து அமுதூட்டிய அருந்தொண்டரின்
அதிசய வரலாறு இது

பொன்னி நதிபாயும் வளமுடைய நாடு சோழநாடு. சோழநாடு சோறுடைத்து என்பார்கள். சோறு என்ற சொல்லுக்கு முத்தி என்றும் ஒரு பொருளுண்டு. முத்தி தரும் சித்திகளும், திருவும் கல்வியும் வீரமும், வெற்றியும், புகழும் நிறைந்த இத்தகைய காவேரித் திருநாட்டின் வளங்காட்டும் பதி, திருச்செங்காட்டங்குடி என்பது. இங்கு தான் உலகில்வளர் உயிர்களுக்கெல்லாம் உயர்காவற்றொழில் பூண்டு வரும் மாமாத்திரர் குலத்திலே பரஞ்சோதியார் என்பார் தோன்றினார். சிவபிரான்மேல் இடையறாப் பக்தியோடு, பலகலையும் கற்றுத்தேர்ந்து உடற்பலமும், உளப்பலமும் ஓங்க வளர்ந்த பரஞ்சோதியார் வடநூற்கலையும் ஆயுள்வேதக்கலையும் பயின்றுவதுடன், யானையேற்றம், குதிரையேற்றமும் படைக்கலப்பயிற்சியும் மேலோங்கப் பெற்ற வீருமானானார் ஈசனடியார்க்குப்பணிசெய்யும் தொண்டில் ஊறிய இவர் மன்னவன் அவையில் படைப்புலத்தில் அரசனுக்கு உற்றதுணையாய், பூசல்முனைக் களிறுகைத்துப் போர் வென்று பொரும் அரசர் தேசங்கள் பலகொண்டு தேர் வேந்தன்பால் சிறந்தார்.

சோழ மன்னனின் வாதாபிப் போரிலே பகைவர்களை மாய்த்து, அந்நகரையும் துகளாக்கி, வரையுகைந்துப், பன்மணியும், நிதிக்குவையும், பகட்டினமும். பரித்தொகையும் எண்ணில்லாதவகை கொணர்ந்து வெற்றிகாட்டிய தானத்தலைவர் பரஞ்சோதியாரின் ஆண்மையினைக் கண்டு மன்னவன் அதிசயித்தான். ஆன்மிகபலத்தினாலே - பக்திச்சிறப்பினாலே பெற்ற பெருவிறலே இதுவன்றி மற்றில்லை இவர்பெருமை என்று இவரின் பெருவலிமையின் திறனை மற்றவர் எடுத்துரைக்கக் கேட்ட மன்னவன், மனமிக வருந்தினான். உம்பர்பிரான் அடியாரை உணராதே கெட்டொழிந்தேன் வெம்புகொடும் போர் முனையில் விட்டிருந்தேன். என வெருவுற்று மனங்கலங்கி பரஞ்சோதியாரிடமே ஓடி வந்து - வணங்கி, எம்பெருமானே நீர் இது பொறுக்க வேண்டும்! - என இறைஞ்சினான்.

அரசே! என்ன இது, என்னுரிமைத் தொழிற்கடுத்த திறம்புரிவேன்- தாங்கள் என்னிடம் ஒப்படைத்த பணியை செய்தேனே அல்லாமல் அதில் பாரபட்சமறியேன.அறநெறிகாக்கும் அரசனானவன் பகைவரிடத்து மக்களைக் காக்கும் நீதிக்கு உதவியதேயன்றி வேறென்செய்தேன்? என்று இறைஞ்ச, மன்னவன் அவரை விளித்து, உமது மெய்ம்மை புரினுயல் விளங்க வேண்டியவா றேகரித்துச் செம்மை நெறித்திருத் தொண்டுசெய்யும் என்று, விடையும் கொடுத்தனுப்பினான்.

அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு தம்ஊராகிய திருச் செங்காட்டங்குடிக்கு வந்து சேர்ந்தார் பரஞ்சோதியார். படைத்தள பதியாயிருந்த அவர் இங்கே பனிமதிவாழ் சென்னியரைக் கணபதீச்சரத்தில் கண்டு இறைஞ்சி முன்னைபோல அப்பதியில் திருத்தொண்டுகளியற்றி வந்தார்.

“அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல மதிதவள் மாடவீதி மருகல்நிலாவிய மைந்தர்சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வமல்கும் சீர்கொள்செங்காட்டங் குடியதனில்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும் கணபதீச்சரம் காமுறவே.”

அழகும் திருவும் அறிவும் ஆண்மையும் ஆசாரமும் நிறைந்த அந்த சைவநன்மகனுக்கு மணம் பேசி, பலர் வந்தார்கள். திருவெண்காட்டு நங்கையென்னும் கற்புடைநங்கை சிவபிரான் திருவடிமறவாத சீலமுடைய மங்கை, திருமணத்தினால் பரஞ்சோதியாரின் வாழ்க்கைத்துணைவியானாள்.

அடியார்களுக்கு அமுதூட்டும் பணியைத் தலைக்கொண்டும், இல்லறமென்னும் நல்லமியற்றியும் மனைவியோடு தவமுயன்று, வேண்டியவாறு அருமையான புத்திரனொருவன் இவர்களுக்கு வாய்த்தான். அம்மகவின் பெயர் சீராளன் என்பது.

மெய்யன்பர்களே!
பெரியபுராணத்திருநூலில் பேசப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்களும், ஒன்பது தொகையடியார்களும் ஒவ்வொரு ஒவ்வொரு நியதிகளில், குறிக்கோள்களில் தம்மைப் பதித்து பக்தியாம் காதல் நெறியுறைப்பின் நெறிநின்றவர்கள். எந்தஇடையூறுவந்த போதும் தம் சொந்தக் குறிக்கோளினின்றும் இம்மியளவாவது பிசகாதுநின்ற அவர்கள்

செய்கைகள் தான் அவர்களை பெரியவர்கள் என்று பேசவைத்தது. வள்ளுவர் பெருந்தகையிடத்தே போய் யாரையா இந்தப் பெரியவர்கள் என்று கேட்டனாம் ஒருவன். வள்ளுவர் சொன்னார் - செயற்கரிய செய்வார் பெரியர் என்று. அப்படிச் செயற்கரிய செயல்களைச் சாதிக்க முடியாதவர்களை எப்படியையா இதற்குள் அடக்கலாம்? ஆகவே சிறியர் செயற்கரிய செய்கலாதார் என்று முடித்தார். ஆக அன்பின் காரணமாய் நியதி, நோன்பு, விரதம், கடமை, குறிக்கோள் இவற்றியன் நின்றும் வழுவாத காதல் உறைப்பின் நெறிதான் பெரியபுராணம் காட்டுகின்ற அன்புநெறி என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அப்படியானால், இங்கே பரஞ்சோதியார் தம்வாழ்வில் இடையூறுவந்தபோதும் கொண்ட குறிக்கோளிலிருந்து மாறாது செய்த தொண்டு தான் எதுவாம்.

"நறைஇதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால் நியதியாகக் கொள்ளும்
துறைவழுவா வகையொழும் தூய தொழில் தலைநின்றார்."

என்று கூறிவிட்டு மேயபடியால் அமுதுசெய்விக்க மனமிசைந்து என்ற அடியை சேக்கிழார் இவருடைய சரித்திரத்திலே கூறுவது தம்மிடம் வருகின்ற அடியார்கள் எந்தவகையிலே கறியமுது வேண்டுகிறார்களோ அந்தவகையிலே பரிமாறும் தன்மையிலே மேலோங்கி இருந்ததைக் காட்டுவதற்காகவும் என்பதை நினைவிருத்திக்கொள்ள வேண்டும். பரஞ்சோதியாருடைய இத்தகைய தொண்டு உலகமெல்லாம் சிறந்து, புகழ்ந்து பேசப்பட்டதில் அதிசயமென்ன?

இப்போது இங்கே, பரஞ்சோதியாரும் இந்த அடியவருக்கு அவருடைய மனைவியாரான பெருகுதிரு மனையறத்தின் வேர் அனையராய் விளங்கு திரு வெண்காட்டு நங்கைபால் பிறந்த சீராளதேவர் வித்யாரம்பம் முடித்து, பலகலைகளும் சாஸ்திரங்களும் பயின்று வளர்ந்து வருகிறது. இல்லறம் நல்லறமாக ஓடியது.

பெரிய தானைத்தளபதியாய் விளங்கியவர், அரும்பெறல் வீரர், ஆஜானுபாகுவாம் தோற்றத்தினர், எத்தனையோ பேரைப் பகைப்புலத்தில் தன் அரசருக்காய் தொழின்நிமிர்த்தம் வெட்டிக்கொன்றொழித்த தீரர் - பரஞ்சோதியார் எவ்வாறு சிறுத்தொண்டர் என்ற பெயரைப்பெற்றார்?

சேக்கிழார் பெருமானே அதற்கு பின்வருமாறு விடைதருகிறார்.

“சீதமதி அரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடி யார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையார் அவர்முன்பு மிகச்சிறிய ராய் அடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார் அவனியின்மேல்”

அருமைந்தன் பிறப்பால் திருச்செங்காட்டங்குடியே மகிழ்ந்து விழாவெடுத்தது. பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்டரும் தம் ஆசைக் குழந்தைக்கு அவ்வக்காலத்தில் செய்யும் பருவச் சடங்குகளையெல்லாம் அமர்க்களமாய்ச் செய்தார். பிள்ளை தத்தக்க பித்தக்க நடைப்பருவத்தை நண்ணியது. மழலை பேசி, தன் தோழரும், உறவினரும் பார்த்து மகிழ தெருவில் விளையாடிக்கொண்டிருந்தது. சீராளக் குழந்தையின் அழகைச் சேக்கிழார் எப்படிச் சொல்கிறார் பாருங்கள்.

“சுருளுமயிர் நுதற்சுட்டி துணைக் காதின் மணிக்குதம்பை
மருவு திருக்கண்ட நாண் மார்பினில் ஐம் படைகையில்
பொருவில்வயி ரச்சரிகை பொன்னாரைஞான் புனை சதங்கை
தெருவிலொளி விளங்கவர் திருவிளையாட்டி லினிதமர்ந்தார்”

குழந்தைக்கு மூன்றாண்டுகள் ஆகியது. சிறுத்தொண்டரின் தொண்டின் சிறப்பினை அறிந்து அந்நாளில் இவரிடம் சண்பைநகர் ஆண்டகையாம் நம் திருஞானசம்பந்த சுவாமிகளே எழுந்தருளி உபசரிக்கப்பெற்றாராம். இச்செய்தியை சம்பந்தப்பெருமானே தம்திருப்திகங்களிலே சுட்டுவார்.

தம்அடியார் திருத்தொண்டின் அருமையை சிறப்பினை, விஞ்சு பக்தியினை உலகத்தாருக்கு எடுத்துக்காட்டி, நன்னெறி அறிவிக்கத் திருவுளம் கொண்ட பரங்கருணைப் பெருந்தடங்கலாகிய சிவபெருமான் என்னசெய்கிறார் பாருங்கள்! “அவருடைய மெய்த்தன்மை அன்புநுகர்ந் தருளுதற்கு, விடையவர்தாம் சித்தமகிழ் வயிரவராய்த் திருமலைநின் றனைகின்றார்.” என்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

ஒரு நாள் திருக்கைலாயத்தினின்றும் இறங்கி வயிரவவேடம் பூண்டு பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்டர் வீடுதேடிவருபவராக - மிகுந்த பசிவேட்கை உடையவர் போலவும் வருகிறார்.

பைரவர் திருக்கோலம் எப்படி அமைந்தது என்பதைச் சேக்கிழார் பெருமான் அழகாகப் படம்பிடித்துக்காட்டுவார்.சிவபிரான் தம் அழகிய கொன்றைப்பூவணிந்த செஞ்சடையை -சுருண்ட கேசத்தைக் கொந்தளமாக, கொத்துப்போல கட்டி முடித்துக்கொண்டார். தும்பை மலரை அத்திருமுடியில் சூடி, தன் தலைமீது சூடியிருந்த வெண்ணிளமதியை பெயர்த்து திருநுதலிலே சூடினரோ எனும்படியாக செம்பவள நெற்றியினில் திருநீற்றுத் தனிப்பொட்டும் திகழ, காதுகளில் வெண்சங்குகளினான குழைகள் சூடி செவரத்தமலர்செறித்த திருத்தோடு விளங்க, கழுத்திலே பளிங்குவடம், தோளிலே கரியுரிவை, எலும்பினாலான கழுத்துமாலை, காலில் சிலம்பு, இடக்கரத்தில் மூவிலைவேற்சூலம், வலக்கையில் உடுக்கு! தண்டாததொரு வேட்கைப் பசியுடையார் தமைப்போல வந்தவர், சிறுத்தொண்டரின் மனைவாயிலுக்கு வந்தார். அப்போது அவர் அங்கு இருக்கவில்லை.சந்தனத்தாள் என்னும் பணிப்பெண் இந்த பயிரவ அடியவரை முன்வந்து தாள்வணங்கி,

அந்தமில்சீர் அடியாரைத் தேடி புறத்தணைந்தார்,
எந்தமைஆ ளுடையவரே! அகத்தெழுந்தருளும் என

மாதரார் தாமிருந்த இடவகையில் தனிபுகுதோம் என்று பயிரவர் கூற அதுகேட்ட பணிப்பெண், மீண்டும் திருவெண்காட்டு அம்மையாராகிய சிறுத்தொண்டர் மனைவியிடம் இது தெரிவிக்க, அவரும் அடியாரை பணிந்து, உடனே வந்துவிடுவார் என இயம்பி உள்ளே அழைக்க அதற்கும் மறுத்தவர் தம்விபரம் கூறினார். பக்கத்தில் தென்பட்ட ஆத்திமரத்தைக் காட்டி அதன்கீழ் தாமிருந்து, தாமதிக்க, சிறுத்தொண்டர் வீடுவந்ததும் தமது வருகையைத் தெரிவிக்குமாறும் கூறி ஆத்திமரத்தின் கீழ் சென்றணைந்தார் அப்பைரவ அடியார்.

இஃதிவ்வாறிருக்க, சிறுத்தொண்டரெனப் பெயரிய பரஞ்சோதியார் யாராவது ஒரு சிவனடியார் கிடைப்பாரா என்று வெளியே தேடிச்சென்றும்

கிடைக்காதவராய் மீண்டும் வீடு வர மனைவியார் சொன்ன செய்தி கேட்டு மகிழ்ந்தார். உடனே அப்பைரவ அடியவரை நோக்கி ஓடிச்சென்று வீழ்ந்துவணங்கினார். தம்மில்லத்தில் அமுது செய்யும் படி இறைஞ்சினார். பயிரவரோ, சிறுத்தொண்டனே! நான் விரும்பும் முறையில் எனக்கு உணவு படைக்க உன்னால் முடியாதே என்று கூற சிறுத்தொண்டர் அவ்வடியாரைப் பார்த்து சுவாமி தாங்கள் விரும்பும் உணவு எத்துனையாயிருப்பினும் அதனை தடையில்லாது சமைத்து அமுதுபடைப்பேன் என்று பதில் கூறினார். தாம் உண்ண விரும்புவது நரபசு என்றும் அவ்விறைச்சி எவ்வாறு பெற்று சமைக்கப்படவேண்டும் என்றும் நிபந்தனைகளை பின்வரும் முறையில் அடுக்கி எடுத்துரைப்பாரானார் வந்த பைரவ அடியார். -கவனியுங்கள் மெய்யன்பர்களே!

1. குடிக்கு ஒரு பிள்ளையாக இருக்க வேண்டும்.
2. ஆண்பிள்ளையாக இருக்கவேண்டும்
3. ஐந்து வயது பராயத்துக்கு உட்பட்ட பிள்ளையாக வேண்டும்
4. அப்பிள்ளைக்கு உடலிலே, உறுப்புகளிலே மாசு மறு குறைபாடுகள் இருக்ககூடாது.
5. தாய் மடியில் வைத்திருக்க தகப்பன் வாள் கொண்டு தலையை அரிய வேண்டும் .
6. தாயும் தந்தையும் எந்தவித துன்பமோ சஞ்சலமோ இன்றி பிள்ளையை வெட்டி கறி சமைத்து எனக்கு பரிமாற வேண்டும்.

அப்படிசமைக்கப்பட்ட பிள்ளைக்கறியை நான் உண்பேன் என்றார்.

பரஞ்சோதியார் அதற்கும் கலங்கவில்லை! உடனே அவ்வாறு செய்து தருவதாக வாக்களித்தவர் தம் மனைவியோடு சென்று ஆலோசிக்க மனைவி திருவங்காட்டு அம்மையாரோ எம் மகன் சீராளனே இதற்கு எவ்வகையிலும் பொருத்தமானவன் என்று தெரிவித்தார்.சிறுத்தொண்டரும் மிக்க நிறைவோடு அதை ஏற்றுக் கொண்டு சிறுமைந்தன் சீராளனை பள்ளியில் இருந்து வீட்டிற்கு அழைத்து வந்தார் அவனை மஞ்சன நீராட்டி அழகாக அலங்கரித்தார்கள் தலையரிந்து வெட்டுவதற்காக தயாராகினார் தந்தை சிறுத்தொண்டர். பிள்ளையோ விடயம் அறியாது நகைத்தது. தாய் சீராளனை தன் மடியிலே வைத்துக் கொண்டாள். சிறுத் தொண்டரோ சற்றும் மனந்தளராது தன் திருத்தொண்டில் உறுதியாக நின்றார்.

இனிய மழலைக் கிண்கிணிக்கால் இரண்டும் மடியின் புடைஇடுக்கி
கனிவாய் மைந்தன் கையிரண்டும் கையாற் பிடிக்க காதலனும்
நனிநீடுஉவகை யுறுகிறார் என்று மகிழ்ந்து நகை செய்யத்
தனிமா மகனைத் தாதையார் கருவிகொண்டு தலையரிவார்

பிள்ளைக்கறி தயாராகிவிட்டது. ஆத்திமரத்தடியில் இருந்த பைரவர் அடியாரை இப்போது சிறுத்தொண்டர் வீட்டுக்குள் அழைத்து வந்தார். படையல் யாவும் தயாரா? என்று வினவிய அவர் தலைக்கறியையும் கேட்டார். சந்தனத்தாள் ஏற்பாட்டால் அதுவும் தரப்பட்டது. தன்னோடு உடனிருந்து உண்ண சிறுத்தொண்டரையும் அழைத்தார். சிறுத்தொண்டர் உட்கார்ந்து இலையிலே படைத்த அமுதை உண்ண முட்படுகையில் எங்கே உன் மகன்? அவனையும் இப்போதே அழை என்று கேட்க சிறுத்தொண்டரும் நங்கையும், ஈறும் முதலும் இல்லாதாருக்கு இப்போதுதவான் அவன் என்று பதிலளிக்க பைரவர் கோவிப்பார் போல் அவர்களைப் பார்த்து உம்மகவோடு இருந்தல்லாது நான் இவ்வமுது உண்ணேன் என்று கூறி உடனே அவனை அழையுங்கள் என்று உரப்பி அடம்பிடிக்க தாய் தந்தை இருவருமாக சீராளா! சீராளா! என்று மனங்கசிந்து உருகி வாயிலில் சென்று அவனை அழைத்து நின்றனர். மகன் சீராளன் பள்ளியில் நின்று மீண்டு வருவான் போல் ஓடி வந்தான் தாய் தந்தையரை அணைத்தான்! “பைரவராக வந்து எம்மை ஆட்கொண்ட தெய்வமே, எம் அன்பினைச் சோதிக்க இதுவும் உன் திருவிளையாடலா அப்பா!” என் பிரார்த்தித்து மகனை அழைத்துக் கொண்டு இதோ பைரவ அடியாருக்கு அவர் விரும்பும் வகையில் உணவு தருவோம் என்று உள்ளே ஓடி வந்து அமுது படைத்த இடத்தை நோக்கினர். பைரவ அடியார் அங்கு இருக்கவில்லை பிள்ளைக்கறியையும் படையலில் காணவில்லை. என்ன அதிசயம்! சிந்தை கலங்கி திகைத்த நேரத்தில் எம்பெருமான் தையலோடும் சரவணத்துத் தனையரோடும் தனி விசும்பில் பூதகணங்கள் தேவர்கள், முனிவர்கள், விஞ்சையர்கள் சூழ காட்சிகொடுத்தார். சிவபிரான் சிறுத்தொண்டரையும் மனையாளையும் சீராளனையும் கூடவே சந்தனத்தாளையும் தன் திருவடி நீழலிலே சேர்த்துக்கொண்டார்!

என்னே பிள்ளைக்கறி சமைத்துத் தந்த பெருந்தொண்டர் சிறுத்தொண்டரின் பக்தி விறல் ?

63 நாயன்மார்களிலும் பிள்ளைக்கறி சமைத்த பெருமானை முதல் நிறுத்தி பட்டினத்தார் பெருமான் வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன் என்று வியந்து பேசுகின்றார்.

**தமிழிலக்கியமும் இலக்கணமும்**

அழகுதமிழில், பழகுசொல்லெடுத்து பக்குவமாய் பகர்ந்தளித்த உங்கள் ஆற்றலைக் கண்டு அதிசயித்தோமையா. அகத்தியன் தன் கமண்டலத்துநீரோ அமிழ்தமோ என அருந்தமிழால் விடைதந்த வித்தகரே வாழ்க நீவிர்.

கலாராஜன்
கனடிய தமிழ் வானெலி

**கல்வியும் சமயமும்**

உங்களைப் போல் ஆற்றலுள்ள தமிழ்ப்பேச்சாளரை ஆன்மிகக் கலைஞரை, தமிழ் மனிதரை இந்த மண் மதிப்போடு வரவேற்கிறது.

சந்திரமோகன்
கீதாவாணி





விவேகா அச்சகம்
416-410-6401